**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, THIRUMANGALAM**

O.S No.219/2017

D.W.1 – சாட்சி. சுந்தரமூர்த்தி, த.பெ.குருசாமி

Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 16.07.2026 in accordance with the provisions of Act XX141.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுந்தரபாண்டி என் தம்பி என்றால் சரிதான். எனக்கு தாவா வழக்கை பற்றிய முழு விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த நீள, அகலம் எவ்வளவு என்றால், நீளம் 52 அடி ஆகும், அகலம் 17 – ¼ அடியாகும். தாவா சொத்தில் எந்த சர்வே எண்கள் வருகிறது என்றால், சர்வே எண்கள். 98/9, 98/10, 98/11, 98/13, 98/14 ஆகும். மேற்படி சர்வே எண்களில் என் தந்தை பெயரில் உள்ள சர்வே எண்கள் 98/13 மற்றும் 98/14 ஆகும். மேற்படி சர்வே எண்கள் 98/13 மற்றும் 98/14 என் தந்தை பெயரில் இல்லை என்றால், சரியல்ல. என் தந்தை பெயரில் தாக்கல் ஆகியுள்ள பட்டாவில் சர்வே எண்கள் 98/9, 98/13 என்றால் சரியல்ல. ஆதியிலுள்ள சர்வே எண்கள் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டா எண்.652ல் கருப்பணன் மகன் குருசாமி என்ற பெயரில் சர்வே எண்கள் 98/9 மற்றும் 98/13 தாக்கலாகி உள்ளதாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். சர்வே எண்கள் 98/9 மற்றும் 98/13 எனது தந்தை பெயரில் தாக்கலாகியுள்ள நிலையில் நான் 98/14ல் வீடு கட்டியுள்ளேன் என்றால், வாய்கரலாக பேசியதன் அடிப்படையில் வீடு கட்டியுள்ளேன். தாவா சொத்து எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். இதற்கு முன்பாக தாவா சொத்தில் வீடு இருந்ததா என்றால் மண் வீடு இருந்தது. மேற்படி மண் வீட்டிற்கு வாசல்படி எவ்வாறு இருந்தது என்றால், கிராம சாலையை தெற்கு திசையை நோக்கி இருந்தது. மேற்படி மண்

வீடு ஒரே நீளமாக 52 அடி மற்றும் அகலம் 17 – ¼ அடியில் சரிபாதியாக இருந்தது என்றால் சரிதான். வாய்கரலாக பிரித்த விபரத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சட்டப்படி பதிவு செய்யாத சொத்தை என்னுடைய அனுபவத்திற்கு கொண்டு வந்தால் செல்லுமா என்றால், வாய்கரலாக பிரித்ததன் அடிப்படையில் செல்லும். நான் கொடுத்திருக்கும் 4 அடி பாதை எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் சர்வே எண். 98/14 ல் வருகிறது. மேற்படி சர்வே எண். 98/14 யாருடைய பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய எதிர்கோரிக்கையில் வாதி படியை ஆக்கிரமித்து கட்டியுள்ளார் என்பது எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால், சர்வே எண்.98/11ல் வருகிறது. மேற்படி சர்வே எண்.98/11 ன் பட்டா யாருடைய பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.07.16 16:29:10 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.